ப்ரஹ்மவித்யா.

ப்ரம்மவித்தியா பத்திரிகை.

மாதம் ஒருமுறை பிரசுரஞ்செய்யப்படும்.

பத்திரிகா க்ரயம்.

	ரூ.	அ.	பை.
ஒரு 1-க்கு	1.	12.	0.
மீ 6-க்கு	1.	0.	0.
மீ 3-க்கு	0.	9.	0.
காபி 1-க்கு	0.	3.	6.

பத்திரிகாக்ரயத்தை மணியார்டராகவாவது, ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால் லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ்மானேஜருக்கு அனுப்புதல்வேண்டும்.

௨-ம் புத்தகம். } சிதம்பரம்:—சர்வஜித்துஸ்ரீ ஆடிமீ ௧௭-உ க்கு ௧௮௮௭ஸ்ரீ ஜூலைமீ ௩௧-உ ஞாயிற்றுக்கிழமை. { இலக்கம்-௨.

[illegible]

ஓர் உபந்நியாசம்.

[முன் தொடர்பு.]

இப்பொழுதும் புத்தமதஸ்தர்கள் சிங்களம், நேபாளம், திபேத்து, சீனு முதலிய தேசங்களில் மிகச் சிறுபான்மையோராய் வசித்து வருகிறார்கள். நமது இந்துதேசத்திலே புத்த மதத்தின் பெருமை குன்றக்குன்ற முற்காலத்து ஜாதிகளும் ஆசாரங்களும் முன்னிலு மதிகக் கட்டுப்பாடுகளுடன் பிராமணர்களால் வெளியிடப்பட்டுவந்தன. அப்புத்தமதம் பரவுதற்கு முன்னரே பிராமணர்களுக்குப் பெருமை இத்தேசத்தில் நிலைபெற்றது. ஆயினும், அவர் செய்த ஜாதிக்கட்டுப்பாடுகள் தடைப்படாதுவந்தன. மனுமுதலியோர் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் எனப் பிரித்து நான்குஜாதிகளாகக் கூறியிருப்பினும் அவை பெயர்மாத்திரத்தில் நிற்க, புத்தமதசம்பந்தத்தாற் பல சங்கரங்கள்தொடங்கி ஜாதிபேதங்கள் பலவாய் மாறிற்று. பிராமணஜாதி ஒன்றுமட்டும் சுத்தமும் மற்றவைகள் கலப்புள்ளனவுமாயின. இப்பொழுது பலதேசங்களில் சுத்தமான க்ஷத்திரியஜாதியும் வைசியஜாதியும் லோபித்ததென்றே சொல்லலாம். பிராமணர்கள் தவிர மற்ற யாவரும் சூத்திரர்களென்றே கணக்கிடப்பட்டார்கள். இப்பொழுது இவ் விந்துதேசத்தில் சுத்தமான க்ஷத்திரியர்களும் சுத்தமான வைசியர்களுமில்லை. யாம் க்ஷத்திரியர், யாம் வைசியர் என்று சொல்லிக்கொள்பவர்களும் விசுவாமித்திரகோத்திரமென்றும், பார்க்கவகோத்திரமென்றும் சொல்லிவருகிறார்கள். அது அவ்வளவு நம்பத்தக்கதல்லவென்பது பலர் அபிப்பிராயம். இதுநிற்க, ஸ்மிருதிகளிற்சொல்லியபடி சுத்தமான சூத்திரவருணமும் இக்காலத்திற் கிடைப்பதரிதே. ஐந்தாம்வருணஸ்தனுயினும் சங்கரஜாதிகளினும் மேலானவனுனதால் சூத்திரனெனவே சொல்லப்படுவான். அங்ஙனமே மனு "வருணங்களில் ஒன்றைவிட்டொன்றையடைவதாலும், மற்றொன்றிற் பெண்களைக்கொள்வதாலும், தமது ஸ்வதர்மத்தை விடுவதாலும் வருணங்களில் சங்கரமுண்டாகின்றது. பிரதிலோமத்தாலும் அநுலோமத்தாலும் பிறந்து ஒருவர்க்கொருவர் சம்பந்தமற்றுநின்ற சங்கரர்களைச்சேர

[illegible]

ல்லுகிறேன்,, என்று தொடங்கி ''சூதர்கள், வைதேகர்கள், சண்டாளர், க்ஷத்திரியர், மாகதர், அயோகவர், முதலானவர் ஒன்றுக்கொன்று சமமான சில சங்கரங்களை யுண்டாக்குகின்றார்கள். முதன்மூன்று வருணங்களுக்கும் தடக்கடுத்தவருணத்து ஸ்திரீகளிடம் எவ்விதம் அநுலோமஜாதி பிறக்குமோ அவ்விதம் வெளிவருணத்தவர்கள் சம்பந்தத்தால் அதிக தோஷமுள்ள ஜாதிகளுண்டாகும். ஒருவர் ஸ்திரீயினிடத்து மற்றவர் கலந்து உண்டாவதும் சங்கரமே. சூத்திரனும் பிராமணஸ்திரீயும் கலந்து ஓரிழிவான ஜாதியை யுண்டாக்குவதுபோல், இழிவான ஜாதியிற் பிறந்த ஒருவன் மேல்வருணத்து ஸ்திரீகளைக்கூடி மிக இழிவான வேறு ஜாதிகளை உண்டாக்குவான்,, என்று கூறியிருக்கின்றார். அதுகொண்டு தாம் பிறந்த வருணத்திற்குத் தாழ்ந்த மற்றொரு வருணத்தவருடன் கூடுதல் மிகுந்த தோஷமென்று வெளிப்படுகின்றது. ஆதலாற்றான் ''சூத்திரஸ்திரீயினிடம் பிராமணனுக்குப் பிறந்தவன் யோக்கியனாயிருந்தால் அவன் பிறந்தவிடத்தால் தாழ்ந்தவனாயினும், ஏழு யுகக்களில் உத்தம ஜாதியையடைவான்,, என்று சொல்லப்பட்டது. பிராமணஸ்திரீயினிடம் சூத்திரனுக்குப் பிறந்தவனே சண்டாளனென்றே ஸ்மிருதிகளின் துணிபு. அவர்களுக்குத் தொழில் ''கிராமத்திற்கு வெளியில் சண்டாளர்முதலாயினோ ரிருக்கவேண்டியது; அவர்கள் பாத்திரங்களை வழங்கக்கூடாது; அவர்களுக்கு நாய், கழுதை முதலாயினவே தனம்; பழைய உடைகளே உடை; பழைய மட்பாத்திரங்களே பாத்திரங்கள்; இரும்பே அலங்காரம்; ஊர்சுற்றுவதே தொழில்; அவருடன் தர்மவருணத்தவர்கள் கலந்து உறவாடலாகாது; அவர்களுக்குள் ஒருவர்க்கொருவர் விவாகமும் விவகாரமும் செய்துகொள்ளவேண்டியது; பழையபாத்திரங்களில் இவர்களுக்கு அன்னமிடவேண்டியது; இரவில் இவர்கள் கிராமங்களிலும் பட்டணங்களிலும் உலாவிவரக்கூடாது; பகற்காலத்தில் இராஜகாரியத்திற்காகச் சஞ்சரிக்கலாம்; அனாதப்பிரேதங்களை இவர்கள் அடக்கஞ்செய்யவேண்டும்,, என்று ஸ்மிருதிகளிற் சொல்லப்பட்டிருக்கின்றது; ''நான்கு வருணத்தவரில் ஒவ்வொரு வருணத்தவரும் தத்தம் வருணத்து ஸ்திரீகளை விவாகஞ்செய்து அவர்களிடத்துண்டாகும் புதல்வரே அவ்வவ்வருணஸ்தராவ,, ரென்று மனுஸ்மிருதிகளிற்சொல்லப்பட்டது. அதாவது பிராமணன் பிராமணஸ்திரீயையும், க்ஷத்திரியன் க்ஷத்திரியஸ்திரீயையும், வைசியன் வைசியஸ்திரீயையும், சூத்திரன் சூத்திரஸ்திரீயையும்விவாகஞ்செய்து அந்த ஸ்திரீகளிடத்திற் பிறப்பவரே பிதாமாதாக்களுக்குச் சமமான ஜாதியுள்ளவரென்பது அதன் கருத்தாம். பிராமணர் முதலிய வருணத்தவர்க்கு இலக்கணங்கூற மாடு, குதிரைபோலச் சரீரத்தில் வேறு அடையாளமில்லாமையால் இங்ஙனங் கூறலாயிற்று. பிராமணன் க்ஷத்திரியஸ்திரீயினிடத்திலும், க்ஷத்திரியன் வைசியஸ்திரீயினிடத்திலும், வைசியன் சூத்திரஸ்திரீயினிடத்திலும் பெற்ற பிள்ளைகளுக்குத் தாய்வழியில் தோஷமிருப்பினும், அவர்கள் பிதாவைப்போல மேல்வருணத்தவர்களென மனு சொல்லுகின்றார். ''தத்தமக்கயன்மைத்தாய வருணத்து ஸ்திரீகளிடம் முதன்மூன்று வருணத்தவர்க்கு உண்டான சந்ததிகள் தாய்வழியாற் குற்றம்பெற்றிருப்பினும், தந்தைவழியுள்ள வருணத்தவரே யென்பது பெரியோர்கருத்து,, என்று அடுத்தவருணத்து ஸ்திரீகளிடம் விதியைச்சொல்லி, ஒன்றுவிட்டொன்று சம்பந்தத்திலும் ''பிராமணனுக்கு வைசியகன்

[illegible]

னியிடம் பிறப்பவன் அம்பட்டனென்றும், சூத்திரஸ்திரீயினிடம் பிறப்பவன் நிஷாதனென்றும், அவனையே பாரசவனெனச்சொல்வது,, என்றும் சொல்லிமுடித்தார். அவ்விதமே சில பிரதிலோமஜாதிகளையும் ''க்ஷத்திரியனுக்குப் பிராமணஸ்திரீயினிடம்பிறந்தவன் சூதனென்றும், வைசியனுக்குப் பிராமணஸ்திரீயினிடமும், க்ஷத்திரியஸ்திரீயினிடமும் பிறந்தவன் வைதேகனெனவும், மாகதனெனவும் சொல்லப்படுவார்கள்,, என்று சொல்லி ''அயோகவனிடத்தில் சூத்திரஸ்திரீ பெற்ற பிள்ளைக்குச் சைரந்திரனென்று பெயர். வலைவீசுவது, அலங்காரங்கள் செய்வதே தொழில்,, என்றும் பலருக்குப் பலவிருத்திகளையும் கூறினார். இவ்விதம் தொழிலைப்பற்றிப் பல ஜாதிகள் ஏற்பட்ட பொழுது ஜாதிகள் அநேகமாயின. விருத்திகளும் நடைகளும் ஜாதியைப்பற்றினதென்று சொல்ல எக்காலமும் முடியாது. எக்காலத்தில ஜனங்களுள் நாகரீகம் எவ்வளவு பரவுமோ அவ்வளவு நடவடிக்கைகளும் விர்த்தியடையும். இவ்விதமிருக்க, ஓர் ஜாதியார் ஒரே தொழிலைக் கைப்பற்றவேண்டுமென்னும் நியமமிருந்தால் உலகத்தின் பொதுநன்மைக்குக் குறைவுவருமென்பதில் தடையில்லை. அதுபற்றியன்றோ இக்காலத்தவர் தத்தம் ஜாதிகளை நோக்காது தத்தமக்குத் தோன்றிய தொழில்களைக் கைப்பெறுகின்றனர். முற்காலத்திற் பிராமணர்களுக்கே பெருமை நிலைபெற்றிருந்தது. அவர்களே மற்றைய வருணத்தவர்களுக்குச் சாத்திரத்திற் கண்டபடி தொழில்களை விதித்துவந்தார்கள். அதுபற்றியே மனுவும் ''பிராமணர் எல்லாவருணத்தவர்களுக்கும் பிழைக்கும் வழியை விதிமுவாமல் எடுத்துரைக்கவேண்டும்,, தாமும் விதிமுவாம லிருத்தல்வேண்டும். என்றும், ''பெருந்தன்மையாலும், சுபாவத்தாலும், நியமங்களாலும், அநேக சமஸ்காரங்களாலும் பிராமணர் சிறந்தவர்,, எனவும் எடுத்துரைத்தார். இங்ஙனம் எல்லாவருணங்களுக்கு மாசர்களும் பற்றைய வருணங்களுக்குத் தொழிலைச்சற்பிக்கும் பிராமணர்கள் தமது தொழிலாய்க்கொண்ட ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஏற்றல், ஈதல் இவைகளுக்குள் ஏற்றல், வேட்பித்தல், ஓதுவித்தல் ஆகிய இம்மூன்றையும் தமக்குத் தொழிலாகக்கொண்டார்கள். அங்ஙனமே ஸ்மிருதிகளில் ''ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஏற்றல், ஈதல் இவை ஆறுமே பிராமணருடைய தொழில். வேட்பித்தல், ஓதுவித்தல், ஏற்றல் இவை பிழைப்பு,, என்று சொல்லப்பட்டிருக்கின்றது. தமது பிழைப்பை நிலைபெறச்செய்ய வேண்டிப் புத்திமான்களான பிராமணர்களால் மற்றவர் அவ்வழிகளைக் கைப்பற்றுதிருக்கும்படி மற்றவர்களுக்கு அதில் அதிகாரமில்லையென ''பிராமணனுக்கும் க்ஷத்திரியன் ஓதுவித்தல், வேட்பித்தல், ஏற்றல் இம்மூத்தொழில்களிலுங்குறைந்தவன். வைசியரும் அங்ஙனமேயாம். இவ்விதமே பிரஜைகளுக்கு நாதனை மனு வுரைத்தார்,, என்று ஏற்படுத்தப்பட்டது. மேற்கூறிய ஆறு தொழில்களுள் பிராமணர்க்குச் சொந்தமான மூன்று தொழில்கள் அதாவது ஓதுவித்தல், வேட்பித்தல், ஏற்றல் இவை பிழைப்புக்குக் காரணமென்பது திண்ணமாம். ஏனைய மூன்று மங்ஙனமாகாதென்றும் வெளியாகின்றது. இவ்வித ஜாதிகளையும் ஆசாரங்களையும் உண்டாக்கி அவைகளைக் காப்பாற்றிவந்தவர்கள் தமது பிரயோசனத்தை நாடிய பிராமணர்களே யானார்கள். அவர்கள் செய்த ஏற்பாடுகள் நிலைபெற்றனவென நிச்சயம்வந்தபின்பு அவ்வேற்பாடுகளைச் சிலந்திப்பூச்சி நூல்

[illegible]

நூற்பதுபோல வரவரப் பெரிதாக்கி, அவற்றுளகப்பட்டவர்களை ஈக்களை அப்பூச்சிகட்டுவதுபோற் கட்டி அங்கிங்கசையவொட்டாமல் வெகு ஜாக்கிரதையாய் அவர்களை அஸ்வதந்திரர்களாக்கித் தயையின்றி முடக்கிவந்தார்கள். இங்ஙனம் பிராமணர்களுத்தமாதிகாரத்தைப்பெற்று மற்றவர்களுக்கு அநேக நிர்ப்பந்தங்களைச் செய்துவந்தபோதிலும், அவர்கள் செய்த ஜாதியாசாரக் கட்டுப்பாடுகள் பொதுவாய் அநேக நன்மைகளை விளைவித்தனவாதலால், அவை யாவரு மனுஷ்டிக்கத்தக்கனவேயாயின. ஏனெனில், இக்காலத்து நிபந்தனைப்பிரகாரம் தண்டனைக்குக்காரணமாயில்லாத மதுபானஞ்செய்தல்முதலிய விஷயங்கள் ஜாதிப்பிரம்சம்வருமெனக் காட்டி அவர்களா லொதுக்கப்பட்டன. அன்றியும், ஒவ்வொரு காலத்திற்கும் தேசத்திற்கு மியன்றபடி மாற்றத்தக்க ஏற்பாடுகளையும் ஒருபொழுதும் மாற்றக்கூடாதென்றும், சீர்திருத்தம் செய்யக்கூடாதென்றும், ஜாதிகள், மதங்கள், ஆசாரங்கள் இவை ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டனவென்றும், ஜாதி மதத்திற்கு அங்கமென்றும் ஏற்பாடு செய்விக்காமலிருப்பாராயின், இதுவரையில் அநேக வழிகளாய்ப் பல நல்ல பிரயோசனங்களு மேற்பட்டிருக்கும். உண்டாகும் நன்மைகளி லதிகமாகத் தீமைகளுமுண்டாயிருக்கும். இக்காலத்து ஜாதியிலுள்ள நிர்ப்பந்தங்களில் தமக்கிஷ்டமானவர்களுடன் போசனஞ்செய்வதையும், மனதிற்கியைந்த மனையாளை மணம்புரிவதையும், தோன்றியவாறு தொழில்களைக் கொள்வதையும் தடுப்பதைச் சிலர் சகிக்கின்றாரில்லை. இத்தேசத்தில் ஒருவருடன் கலந்து போசனஞ்செய்வதைத் தடுப்பதால் கெடுதி யாதொன்றுமில்லை. ஏனெனில், இத்தேசத்தார் ஜாதிபேதத்தால் ஒருவரோடொருவர் கலந்து போசனஞ்செய்யாவிடினும், அங்ஙனம் போசனஞ்செய்பவரைக்காட்டிலுமதிகமாகவே ஒன்றுபட்டுச் சிநேகங்கொண்டு லௌகிகவிவகாரங்களை நடத்திவருகின்றார்கள். வரும்.

[மொழிபெயர்ப்பு]

பாஷோற்பத்திப் பிரசங்கம்.

[முன் தொடர்ச்சி.]

மனிதர்களைச் சிருஷ்டித்த கடவுள் அவர்களுக்கு உபயோகத்திற்காகப் பாஷையைச் சிருஷ்டிக்காதொழிந்தபோதிலும், அதை உண்டாக்கத்தக்க புத்தியையும், அதற்குவேண்டிய சப்தத்தையும் சிருஷ்டித்தேயிருந்தார். உலகத்திலே சிற்பவித்தையையறிந்த சிற்பியும், மரம், கல் முதலிய சாமான்களும் சேர்ந்திருக்குமாயின், ஓர் வேலை முடிவதிற் றடையுண்டோ? ஆதலால், பாஷை முடிந்தவிதமிதுவெனச் சிலர் கூறுவதாவது:— “ஆதியிற்சிருஷ்டிக்கப்பட்ட மனிதர்கள் ஆங்காங்கு திரிந்துகொண்டு ஓர் மலையினுச்சியிற் காகைமுதலியவைகளைப் பார்த்து அவைகளின் இயல்பை மற்றவர்க்குத் தெரிவிக்கத் தம்முள்ளத்திற்றோன்றிய தாற்பரியத்தைக் கைகாற் சேட்டைகளைக்கொண்டு வெளியிட உத்தேசித்திருக்கலாம். அதுகொண்டு மற்றவர் அவருடைய உள்ளத்திற்றோன்றிய தாற்பரியத்தை அறிந்திரார். அவர் உடனே தன் விரலால் மரத்தைச் சுட்டிக்காட்டிக் கா, கா, கா வென்று சில வார்த்தைகளைச் சொல்லியிருப்பார். அதுகொண்டு மற்றவர் காக்கைகள் இங்கிருக்கின்றனவென்று

ஷ்ப்ரயாயாபஸ்யா:கஸ்யாஶ்ருத்வ ஸ்ப்ராஹாஸ்ய. யதா ஸியசுக்கிம்விஜ்ஜீவிகா ஸ்லீகாஸ்யா நிஷேத்யம்சேவந நக்ஷத்வே. தத்ர ஸமோஜ நதிஷேய ஸ்தாவதே கதேஶே கிம்விசுகா:. யதி த்ரஜா திஹேதா சுஸமா ஸஜ்ஜ நா ஸ்விஜ நா:வ்ராபஸ்ஸ ஹோஜிஹ்யாவிஷயபஸிம்வே த்ரீத்யம்பாநேஷ்வத்தைளக்கிகவ்யவஹாரேஷ ஸஹ க்ருகாரேநாஹவந்தி. உதாவ்யா மதிஷ்யதி

ஶாப்தாஶவத்திவ்யஸம்ஹ:

[கநபம்ய:]

——):○:⌒:○:(——

தநஷ்யாநுவ்ருஷவத:விபிநாதேஷாதேவபோமா யபத்யவிஹாஷாவிநதிதா தயாவி தத்வஸ்ஞ நக்ஷாவ்ரதிஹா தஸுஸாய நஹ் தி: ஶப்தஸ்தே நதி ராயிஷாதா்வேவ। ஸவஹாயவ்யகவேகாதஷ்யோபி ஸ்நிகாஷேஷஷகாதிஸாரோஹ்யா ஃவிஜாஹ்ரதோமரஹ நிரோணம்॥ ஸவம்ஸ்யி தஹாஷோ த்தீதீவ்ரமாவஸிதிதி திகதிவிக। வஸ்வ்ருஷவஷோ:ஸ்வஹம்தத்ர தத்வப்ஸ்வஜ:குவிஶ்ருவாதவஶிவஹோஸோஷ்வி ஹவதாவதயவாநுவஶ்ம்தி॥ தத்ரஸித ஷ கவ்ரிதவ்யதர்ரா தஸஹ்யதேநிவேதயி கஸித்தி ஸவஸ்ஸவ்ருதயோதிதாம் ஹாவநாராவிஶ்ருகீஷஹ ஸ்வாதாதிநாதஸுவ்ர கநாய வ்யஸ்திஜதா தாவகாதஹாஶயம்நஹ்ரணாதி। தஹாஸதஜந்யாதஹ ஶாவாம்நிதிஶநு. “கா-கா-கா” உதிவணநந ஸ்வஹேத। தஹாக்கேவதவ “காகாஸ்திஷம்தீ” தீ ரஸ்தஶம்ஹ்ரணாத॥ ஸவம்வாயஸவாவக:காகஶ்போ நிஷந:। ஶப்தாதஹரணாவேவ்யவம்வ்ர ஸகாமேஷஸஸம் கேதாநுமேஹிவஜதி। உதம்வேதத்ர “குநக்ருதிஸிதா ஜ” உதிவ்யவஹாரா:॥ ஜயம்ஹிநீம்தாக்ரவ்யாஸாரா நேபயமுகயம்விதஸஷநீபஸாம்மதாவிமணதீர் யாவாவகாநு நகயதேவி வ்யாஸ்ஸஹீஷ உதிகஸ்யவேகஸும்

உதஹோகேவதஹஶம்தி। யதா। வயம்ஹஷ.ஶோக, விஸ்மய, ஹயாதிவிகாரேணாக்ராந்தா: ‘ஹம்த,’ ‘ஹாஹா,’ ‘அஹோ,’ “ஹீஹீ,” ‘அஹஹ’ உத்யாதிஶப்தாநேவாயவஹவவேயயோவாராஹ தயாவவஹஷா கவிதத்தஸ்ஹஶநே நதத்விகாராவிஷோநஸா ஸ்த்துகதிகாதிஜநயா ரேஸ:। காநீரா திகதிகாதி தேஷாம்தேஷாம்வ ஸ்ம்நாம்வாவகா:ஶப்தாவஹம்வ:। உவஹ்யதேவா ஷ்யாவிகதிவிகாரஹேதாநமண ஸ்வாரணாண

அறிந்திருப்பார். அதுமுதலாகக் ‘காக்கை’ யென்னுஞ் சொல் ஓர் வகைப்பறவைக்குப் பெயராக ஏர்ப்பட்டது. இவ்விதமே அநேக சொற்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சமயங்களிற் றத்தமுள்ளத்திலுதித்த அபிப்பிராயங்களை மற்றவர்களுக்குப் புலப்படுத்தவேண்டித் தத்தமக்குத்தோன்றியவாறு சப்தங்களையுண்டாக்கி, ஒவ்வொன்றிற்குப் பெயராக்கினர். இதனையே அநுகரண சித்தாந்தமென்று பெரியோர் வழங்குவார்,, என்பதாம். இப்படிப்பட்ட சித்தாந்தம் உலகத்திலில்ல நாம் காணும் பிராணிகளிடத்தும், வேறுசில பதார்த்தங்களிடத்தும் ஓர்கால் ஒத்திருப்பினும், குணங்களையுந் தொழில்களையுங் குறிக்கும் சப்தங்களில் ஒத்துவராததலினால், இது நிலைபெற்ற சித்தாந்தமன்றென்பது சிலருடைய தாற்பரியம். வேறு சிலரோ “நாம் சந்தோஷம், விசனம், ஆச்சரியம், பயம் முதலகிய விகாரங்களால் மனங்கலங்கி நம்மறிவின்றி “ஆகா, அந்தோ, அகோ, ஹி ஹி ஹி, ஹ ஹ ஹ,, என்று தொடங்கிய சப்தங்களையுச்சரிப்பது வழக்கமாயிருக்கின்றதன்றோ? அவ்விதமே முற்காலத்து மனிதர்களும் அவரவர் ஒவ்வோர் வஸ்துவைத் தாம கண்டவுடன் தம்மனதிற்குத் தோன்றியவாறு சப்தங்களை மாற்றிக்கொண்டனர். அவைகளே இவ்வுலகத்தில் பல வஸ்துக்களுக்கும் பெயர்களாக வழங்கப்பட்டன. அதுபற்றியே இக்காலத்திலும் சிற்சில விகாரங்களுக்கு இடுகுறிப்பெயராக “ரண ரணகம்” முதலிய அவயவப்பொருளற்ற சப்தங்கள் உண்டாயின” என்று கூறுவர். இதுநிற்க; உலகத்திலே ஒவ்வொரு மனிதர்க்கும் கண்ணிற்கலங்காரமான ஓர் பொருளைக் காணுங்கால் மனக்களிப்புண்டாவதும், சிங்கமுதலாகிய துஷ்டமிருகங்களைக் கண்டவுடன் இருதயத்தில் நடுக்கமுண்டாவதும் இயற்கையென்பது ஆலோசிக்கத்தக்கதே. அவ்வாறு அழகுமிகுந்த ஓர் பூங்கொத்தைப் பார்த்தவுடன் ஆச்சரியமும், கடுங்கானலிலும் லங்கணம் முதலிய சிகிச்சைகளிலும் மனவருத்தமு முண்டாகுமென்பதை யாம் ஒப்பியேயிருக்கின்றோம். ஆயினும், அவ்விடத்துண்டாகும் நினைவுகள் அங்கு காணப்பட்ட பழமுதலியவற்றின் இனிமைமுதலாகிய குணங்களைப்பற்றினவோ? சிங்கமுதலியவற்றின் கொரேத்தன்மையைப்பற்றினவோ? புஷ்பங்கள் முதலியவற்றிலுள்ள பலவித நிறங்கள்முதலிய குணங்களைப் பற்றினவோ? அன்றிக் கானல்முதலியவற்றாலுண்டான எரிச்சல்முதலியவற்றைச் சகியாமையாலுண்டாயினவோ? என்று பல ஆசங்கைகள் நிகழின், அதன் வெளியிலுள்ள பதார்த்தங்களின் குணங்களையும் தொழில்களையும்பற்றி அவ்வித்தோற்றங்களுண்டாயினவெனவிடையளிப்பதேயுசிதமாகும். அங்ஙனமாயின், உள்ளத்திற்றோன்றிய தோற்றங்களுக்குப் பெயர்களான களிப்பு, ஆச்சரியம், அச்சம், எரிச்சல் முதலாகிய சொற்கள் உண்டாவதற்குக் காரணமாகும் அனுபவங் கிடைப்பதரிதே. வெளியிற் காணக்கூடிய குணங்களுக்கும், தொழில்களுக்கும் பெயர்களை யுண்டாக்கிக்கொள்வதற்கு முற்கூறியவழியிற் சில காரணங்களிருந்தபோதிலும், அதுகொண்டே எல்லாச்சொற்களு முண்டாயினவென்று கூறுதல் யாங்ஙன மமையும்? ஆதலின், இந்தவழியும் முற்றிலும் பொருந்தாததேயாம். இதனையே ஒலிச்சித்தாந்தமென வழங்குவது. இவ்விருவகைச் சித்தாந்தங்களையும் விலக்கித் தாம் உணர்ந்தவாறு (Maxmoollur) மாக்ஸ்முல்லரென்பவர் ஓர் சித்தாந்தம் முடித்திருக்கின்றார். அஃ

[illegible]

தாவது: "உலகத்தில் நாம் காணும் ஒவ்வொரு பொருள்களும் ஒன்றுடனொன்று உரைந்தால் ஓர் ஒலியுண்டாவது இயற்கையிலுள்ளதென்பதிற் றடையில்லையே. அவ்வாறு மனிதர்களுடைய உள்ளம் ஒவ்வொரு பொருள்களையுங் கவருங்கால் ஒவ்வொரு சப்தங்களைத் தோற்றுவிக்கும். ஒலிகளோ பொருள்கள் தோறும் வேறுபடும். அவற்றுள், மனிதர்களுடைய உள்ளத்திற்கு மிருகமுதலியவற்றினு மூயர்ந்த ஊக்கமென்னும் சக்தியிருத்தலால், அவ்வுள்ளத்திற்றோன்றும் ஒவ்வொரு சப்தங்களும் பொருள்களோடியைந்து இனிமையுள்ளனவாசவு மேற்படுகின்றன. ஆதலால், முற்காலத்துதிருந்த மூலபுருடர்களின் உள்ளத்திறந்தோன்றிய ஒலிகளின் தொகுதியே ஆதியிற் பாஷையென வழக்கப்பட்டது" என்பதேயாம். ஐயா! நாம் யாது சொல்வோம்! பாஷைகளினுண்மைகளை யறிந்தவரிற் சிறந்தவரொன்றும், தம்மே லன்புடையா சகமயக்கத்தை யகற்றும் மதிநுட்கவலிமைபெற்றவரொன்றும், மேதாவிகளின் மூலகுருவென்றும் பேறறிசையார் கொண்டாடுந் தகைமைபெற்ற இம் மாக்ஸ் மூல்லரென்பவர் சாமானிய ஜனங்களைப்போல எழுதியதற்குக் காரணமென்னோ அறியேம். அந்தோ! இவர் அநுகரண சித்தாந்தத்தை வெகுவா யொப்பினார். டௌ. டௌ. மதமென்னு மொலிச்சித்தாந்தமும் பூர்வகாலத்து மதமென்று ஒருவாறு ஒழித்தார். பின்பு தம் புத்திக்குத் தோன்றியவாறு சாமானியபுத்திமான்களு மொப்பத்தகாத ஓர் சித்தாந்தத்தையு மெடுத்துவிடுத்தார். இவருடைய உள்ளம் யாதோ அறியேம்! இவர், சரியான காரணமிருப்பினும் இல்லாவிடினும் தமது வாக்கியத்தை வேதவாக்கியம்போல் மற்றவர் நம்புவாரென்று எண்ணினார்போலும். "சிறுவர் வார்த்தையேயெனினும், கிளிகளின்மொழியேயாயினும் யுத்திக்கொத்தனவாயின் ஒப்பத்தக்கனவே,, யென்று ஆன்றோர்வழக்கத்தையனுசரித்த நாம் இவருடைய சித்தாந்தத்தைத் தெருவிற்றிரியும் சாமானியஜனங்களிடும் வீண்கூச்சலுக்கே யொப்பிடுவோம். காரணமின்றிக் கற்கள் பிறந்தனவென்று வேதத்திற் கூறியிருக்கின்றதென்றால், அதனை எந்த மூடனேனும் நம்புவனோ? மனிதர்களும் மற்ற மணிமுதலாகிய வஸ்துக்களும் ஒன்றெனவொப்பிட்ட இம்மகான், மணியின் உள் நாக்கு அடிப்பதால் சத்தமுண்டாவதுபோல மனிதர்க்கும் நாக்கின் சம்பந்தத்தாற் சத்தமுண்டாகின்றதெனக் கூறுமெதாழிந்ததென்கொலோ! அங்ஙனமொப்பிட்டிருப்பாராயின், இப்பொழுது நிகழ்ந்தவற்றினும் மிக்க வியப்பாகவேயிருக்கும். யாம் எமது குற்றவுணர்ச்சிக்கு மகா மேதாவியாகிய இம்மாக்ஸ்மூல்லரையும் ஆளாக்கியது "பரமசிவனுக்குத் திருவாபரணமாய் நின்ற சர்ப்பங்கள் கருடனைச் சுகமாவென்று வினவியன" என்பதுபோல அநேக வித்துவான்களின் அருமொழிகளை யப்பியசித்த வலிமையினாலேயே யென்பதை அறிஞர்காள் நீவிர் யாவருமறிவீர்கள். அற்றாயின், யாம் பண்டிதரோடெதிர்ப்பதெங்ஙனம். இவ்வாறு பாஷோற்பத்திவிஷயத்திற் பற்பல வழிகளை யெடுத்துக்காட்டினோம். சிலவற்றை மறுத்தோம். இவற்றில் எமது மதம் யாதெனில், முதற்கட்கூறிய அநுகரணசித்தாந்தமேயாமென்க. ஆயின், அச்சித்தாந்தத்தின் குணம் தொழில் முதலாயினவற்றை யனுகரித்தல்கூடாதாதலின், அச்சித்தாந்தத்திற் கஃதோர் குற்றமாமெனக்கூறினாலன்றோ? அதனை இங்ஙனம் மாற்றுவாம். தொழில்

[illegible]

[illegible]

𑌸-𑌰𑌾-𑌰𑌾𑌜𑌰𑌾𑌜𑌵𑌰𑍍𑌮𑌾

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾

𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌭𑌾𑌷𑌾.

𑌇𑌤𑌿𑌹𑌾𑌸𑌃

[illegible]

[illegible]

களிலுங் குணங்களிலும் கண்டவுடன் அதற்கு ஓர் அநுகரண சப்தம் அமையாவிடினும், பரம்பரையில் அதற்குமோர் சொல் உண்டாகக்கூடும். ([illegible]) முதலிய முறறுவினைப்பகுதிகளில அவைக ளுகேற்பச் சில அநுகரணங்களையுங் காணலாம். அவ்வாறே தற்காலத்தவர் வழங்கும் குறுகுறுதல், குமுகுமுத்தல் [வாசனைகமழ்தல்] முதலிய சொற்கள் முற்றிலு மநுகரணங்களாக வே கொள்ளற்பாலன வன்றோ? இவ்விடங்களில் தொழிலை அநுகரிப்பது வெளிப்பட்டதல்லவா? இவ்விதம் திரவியங்க ளிலும், தொழில்களிலும் சொற்கள் நிலைபெற்றனவாதலால், குணங்களிலும் ஓர்விதமாய் முடிக்கலாமென்றுணர்க. பர்வதங்களினுச்சிகளிற் பிறந்து, குகைகளிற் புகுந்து, காடுகளிலொளிந்து உலகத்தார் களிக்க வெளிப்படும் அருவிகளைப்போல், பாஷையென்பதும் ஊக்கத்திற்கெட்டாத ஓர் நிலையில் நின்று உலகத்திற்குச் சுகத்தைக்கொடுப்பது என்று வெளியாயிற்று. இவ்விஷயம் எண்ணத்திற்கெட்டாத விஷயமேனும், இச்சாரஸ்வதசமாஜத்திற் கூடியிருக்கும் வித்துவான்களின் அனுக்கிரகத்தால் ஒருவாறு இவ்விடயத்தை யெழுதிமுடித்தாம்.

ப்ரம்மவித்தியா.

சம்ஸ்கிருதபாஷை.

இதிகாசம்.

[முன் தொடர்பு]

பாரதத்தின் காலத்திற்கும், இராமாயணகாலத்திற்குந் தாரதம்மியஞ் சொல்லுமிடத்து மேற்றிசையாருட் சிலர் பாரதம் முந்தியதென்றும், இராமாயணம் பிந்தியதென்றுஞ் சொல்வதாகவும், அதற்குச் சில காரணங்களை யெடுத்துரைப்பதாகவும், அக்காரணங்க ளிவையெனவும் சடந்த சஞ்சிகையிலே எடுத்துக்கூறினுமன்றோ? அதன் முதன்மையாகக் குறிக்கப்பட்ட காரணத்தை மறுக்கவேண்டிய வழியை இங்கே எடுத்துக்கூறுகின்றாம்:—

அவர்கள் பாரதம் பிறந்த காலத்தினும் இராமாயணம் உண்டாகிய காலத்திலே ஜனங்களுக்கு நாகரீகமதிகமென எண்ணினர். அதனையே முதற்காரணமாகவுங் கொண்டனர். அதற்குநிதரிசனமாய் இராமாயணத்திற்பாலகாண்டத்திலே அயோத்திமாநகரை வருணித்திருப்பதைப் பார்க்குமிடத்து அக்காலத்து நாகரீகம் வெளிப்படுமென்பதும் அன்னவர் கருத்தாம். யா மிதுவிஷயத்திற் கூறுவதென்னையெனின், யாவரேனுமொருவர் இவ்விராமாயண பாரதங்களை முற்றிலும் படிப்பாராயின், அவ்விரண்டின்காலங்களை வரையறுக்கத் தாமேவல்லவராவார். அவைகளை முற்றிலும் படித்தற்குக் காலமில்லாத சிறுவர்களுக்கு உபயோகமாகும்படி யாம் முயலல் பயன்படத்தக்கதாமன்றே. அதுபற்றியே யாம் இதுவிஷயத்திற் பிரவேசித்தேம். மாபாரதத்திலே ஆரணியபருவத்தில் வீமசேனன் ஓர் புஷ்பத்தைக் ([illegible])கொண்டுவரும்பொருட்டு வடதிசை

[illegible]

யைநோக்கிச்சென்ற சரித்திரத்தை யெடுத்துக்கூறுமிடத்திலே அவ்வீமசேனன் அனுமனைக் கண்டதாகவும், அங்கு இருவரும் பிரஸ்தாபித்துக்கொண்டதில் இராமாயணத்திலு மப்பெருமை நன்றாக வெழுதியிருக்க நாம் பார்த்திருக்கின்றேமென்று வீமசேனன் புகன்றதாகவுமெழுதியிருத்தலாலும், இராமாயணோபாக்கியானமென்று பாரதத்தில் ஓர் உபாக்கியான மிருத்தலாலும் இராமாயணம் முந்தியதென்றும், பாரதம் பிந்தியதென்றும் வெளியாகின்றதன்றோ? ஆயினும், இக்காலத்தவர் தங்கொள்கைக்கு மாறுகிய வாக்கியங்களை இடையிற் சிலர் எழுதிக்கோத்துவிட்டனரென்றுசொல்வது வழக்கமாமன்றோ? அங்ஙனமே இவ்விஷயத்திற் சாற்றினுஞ் சாற்றுவர். யாம் இதுவிஷயத்திற்கூறுங் காரணம் ஒன்றல்ல; பலவுண்டு. அவையாவன:— நாகரீகம் விருத்தியாவது பிற்காலத்தென்பதன்றோ அவர் கருத்து? உற்றுநோக்கில் இராமாயணத்திற்கண்ட நாகரீகத்திலும் பாரதத்திலதிகமெனப் புலப்படுகின்றதேயன்றிக் குறைந்திப்பதாகத் தோன்றவில்லை. எங்ஙனமென்னில், இராமாயணத்தில் நடந்த யுத்தத்தைச் சற்றுக் கவனித்துப்பார்க்குமளவில், ஆயுதப்பயிற்சி சிறிதேனுமின்றி வெறும் முரட்டுத்தனமாய்க் கற்களையும் மரங்களையுங்கொண்டு யுத்தம்புரிந்தார்களென வெளியாகின்றது. பாரதத்திலே யுத்தம் நடந்திருப்பதைக் கவனித்துப்பார்க்குமிடத்து, வியூகங்களுடனும், இன்னும் பல விசித்திரமான ஆயுதப்பயிற்சிகளுடனும், சைனியங்களை நடாத்தும் வன்மைகளுடனும், பலவித தந்திரங்களுடனும் மிக நன்றாக நடந்திருப்பதாகப் புலப்படுகின்றது. அதனை நன் காலோசித்துப்பார்க்குமிடத்து அக்காலத்து நாகரீகம் தெற்றெனப் புலப்படும். அன்றியும், வருணாசிரமதருமங்களிலுள்ள கொடுமைகள் காலந்தோறுங் குறைந்துவருவதும் யாவர்க்குந் தெரிந்த விஷயமே. இராமாயணகாலத்திலே ஸ்ரீராமர் சம்புகனென்னும் ஓர் சூத்திரன் தவம்புரிய அஃதநியாயமென் றவனைச் சங்கரித்தாரென் றெழுதியிருத்தலால் அக்காலத்திலே கொடுமை மிகுத்திருந்ததென்றும், பாரதகாலத்திலே விதுரர், சூதர், காவல்கணியென்னுஞ் சஞ்சயர் முதலாயினோர் எய்திய ஓர் பெரும் நிலைமையைக் கவனித்தால், அக்காலத்திலே ஞானத்தைப் பற்றி அவர்களுக்குச் சாதியால்நேர்ந்த குறை நீங்கியதென்றும் வெளிப்படுமன்றோ? இங்ஙனமாகவும், இதுபற்றியேனும் காலங்களை முன்னென்றும் பின்னென்றும் நிச்சயிக்கவியலாதா? அன்றியும், இராமாயணத்திலே கிஷ்கிந்தாகாண்டத்தில் சீதாதேவியைத்தேடும்படி சுக்கிரீவன் வானரங்களை யேவிய சரித்திரத்தை எழுதுமிடத்தில், மேற்றிசையிலே பிராக்ஜோதிடமென்னும் பட்டணத்தில் நரகனென்னும் பெயர்வாய்ந்த ஓர் அசுரன் இருக்கின்றானென்று ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. பாரதத்திலோ அந்நரகாசுர னிறந்தபின் அவனுடைய குமாரனாகிய பகதத்தனென்போன் யவனரென்னும் ஓர் சாதியார்க்கு அரசனாகிப் பாரதயுத்தத்திற் சகாயம்புரிய வந்தவனாய்ப் புலப்படுகின்றது. அக்காலத்திற் றகப்பன், இக்காலதிற் பிள்ளையென்றால் இது முன் இது பின்னென்று அறிந்துகொள்ளலாம். பின்னும், தென்னாட்டிலே விந்தியகிரித் தொடர்க்கும் சோழநாட்டிற்குமிடையே தண்டகாரணியமென ப்பெயர்வாய்ந்த ஓர் வனமிருந்ததாகத் தெரியவருகின்றது. மாபாரதம் நடந்தகாலத்திலே தருமபுத்திரர்புரிந்த இராசசூயத்திற்காகத் தென்னாட்டில் திக்குவிஜயஞ்செய்யும்பொருட்டுச்

[illegible] (Darwin) [illegible] (Evolution) [illegible]

சகாதேவன் வந்தபொழுது அக்காங்களெல்லா மகிழ்ந்து ஜனங்கள் குடியேறித தெலுங்கநாடு பாலியிருந்ததாகத் தெரியவருகின்றது. அவ்வாறு இலங்கையில் ஸ்ரீராமனுடைய திருவருட் பிரசாதம்பெற்ற விபீஷணன் தருமபுத்திரருக்குச் சில காணிக்கைகளை யனுப்பினனென்று எழுதப்பட்டிருக்கின்றது. கிஷ்கிந்தாநகரத்தில் மைந்தனென்றும், துவிதனென்று மிருவரே வசித்தார்களென்று வெளியாகின்றது. இவைநிற்க; இராமாயணத்திலே ஸ்ரீவசிஷ்டரும், அவரது சக்திமுனியும், அவருக்குப பராசர்பிறந்ததும் எழுதப்பட்டிருக்கின்றதேயன்றி, இம்மாபாரதத்தையியற்றிய வியாசமுனிவர் இருந்ததாகப் புலப்படவில்லை. வியாசர், பாண்டுவின் வமிசத்திற்கும் மாபாரதயுத்தத்திற்கும் மூலகாரணரென்பதோ, திண்ணம். இதுமட்டுமன்று; எல்லா ஜனங்களும் இராமாயணகாலத்திலே ஒற்றுமையும், ஒரே மதமுமுடையரா யிருந்ததாகத் தெரியவருகின்றது. பாரதகாலத்திலோ ஐந்துமதங்க ளிருந்ததாகவும், அவைகள் அனுஷ்டானத்திற்கு வந்ததாகவும் வெளியிடுகின்றது. ஸ்ரீராமாயணத்தில், உத்தரகாண்டத்தில் ஸ்ரீராமன் பட்டாபிஷேகம்பெற்றுச் சிம்மாசனத்தில் வீற்றிருக்குங்கால், அவரைப் பார்க்கவந்த ஜனங்கள் முதலிய அநேக மகாராஜாக்களுள் காசிதேசத்தை ஆள்பவனும், திவோதாசன் என்கிற மகாராஜனுடைய குமாரனுமான பிரதர்த்தனென்னும் பெயருடைய ஓர் அரசன தமது சிநேகிதனென்று ஸ்ரீராமனால் மரியாதைசெய்யப்பட்டதாக எழுதப்பட்டிருக்கின்றது. மாபாரதத்தில் அநுசானிகபர்வத்தில் வீஷ்டுமாசாரியார் தருமபுத்திரருக்குத் தர்மோபதேசம்புரியுங்காலையில், தருமபுத்திரர் தாம் பிராமணனாகவேண்டுமென்னும் அவாவுடன் விசுவாமித்திரர் சரித்திரத்தையும், வீதஹவ்யமகாராஜன்சரித்திரத்தையும் குறித்துக்கேட்க அதற்கு இவ்வருணாசிரமங்க ளநாதியென்றும், அவை இயற்கையானன்றிச் செயற்கையான் வாராவென்றும் சொல்லுதற்கு நினைந்து, முதலில் அதன்பொருட்டுச் சொல்லிய ஓர் கதையிலே "திவோதாசனென்னு மரசனுடைய குமாரனாகிய பிரதர்த்தனென்னும் ஓர் அரச னிருந்தான்" என்று சொல்லப்பட்டிருத்தலினால், பாரதமே பிந்தியதென்றுரைக்கத் தடையுண்டோ? நிற்க; அங்ஙனமே மேற்றிசைவித்துவான்களிலொருவரான (DARWIN) டார்வின் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டதும் மேற்றிசைப்புலவர்கள் பலர் ஒப்பப்பதம்பெற்றதுமான பரிணமவாதம் (Evolution) என்னும் சித்தாந்தத்தின் வழியை ஆலோசிக்குமிடத்தும், ஸ்ரீராமன்காலத்தில் மனிதர்களும், மனிதரைப்போன்ற குரங்குகளும், அவர்களுள் ஒருவர்க்கொருவர் விவகாரங்களும் இருந்ததாக நன்றாய் விளங்குகின்றது. பாரதத்திலோ மனிதர்கள் யாவரும் ஒரே தன்மையராகவிருந்தார்களென்று காணப்படுவதால் அப்பாரதம் பிந்தியதே. அந்தோ! இங்ஙனமிருக்க; "நித்திரையில் விழித்துக்கொண்டதாய் ஓர் சொப்பனங்கண்டேன்" னென்று சொன்னவன் விழித்துக்கொண்டாற்போல், இராமாயணத்தை பாரதத்திற்கு முந்தியதே; ஆயினும், புஸ்தகமெழுதியதுமாத்திரம் இராமாயணம் பிந்தியும், பாரதமுந்தியுமாயிருக்கலாம் என்று சிலர் சொல்கின்றனர். இக்காரணத்தையும் ஆராயுமிடத்துப் பயன்படாதொழியுமென்பது திண்ணமாம். என்னெனில், யாம்காட்டிய காரணங்கள் யாவும் அக்கதை ஒன்றே முன் நடந்ததெனக்காட்ட வெழுப்பப்பட்டனவன்று. பின்னையோவெனில், எழுதிய காலத்தையுங் குறித்துக்காட்டினவே. பராசமுனிவர் குமாரராகிய ஸ்ரீ வேத

[illegible]

வியாசமகாரிஷி பாரதத்தை யெழுதினரென்பது யாவருமறிந்த விஷயமேயாம். அவ்வேதவியாசர் இராமாயணமெழுதியகாலத்திற் பிறக்கவேயில்லையென்றும், வசிஷ்டமகாரிஷியின் மிசம் பாராசர்மட்டில் நின்றதென்றும் தெரியவருகின்றது. பிறக்கப்போகின்றவர் பெயரைவைத்து முன் வேறொருவர் எழுதியதாயிருக்கலாமென்பது யுத்திக்கொத்துவராதெங்ஙனம்? இனி, அவர்கள்சொல்லு மற்பககாரணங்களுக்கும் முறையே சமாதானங்கூறுவாம்:—

அவர்கள் இரண்டாங்காரணமாக மைத்துனனுக்குப் பிள்ளைப்பெறுவது நாசரீகமில்லாதகாலத்திலிருந்த வழக்கமென்றும், அதை யுகாந்தரதர்மமென்று இந்துக்கள் வழங்குவதால், அத்தர்மத்தை விரித்தெழுதிய பாரதம் யுகாந்தரத்திற்றானே தோன்றியிருக்கவேண்டுமென்றும், ஸ்ரீராமனுடைய சரித்திரத்திலங்ஙனங் காணுமையால் இராமாயணம்பிந்தியதென்றுங் கூறுகின்றனர். இஃது இராமாயணத்திலின்றென்பது அவரது மனோராச்சியமே. எங்ஙனமெனில், நாம் "கேசரியென்பவன் மனைவியிடம் வாயுதேவனுக்குப் பிறந்தபிள்ளை வாயுதேவனுக்கு ஔரஸபுத்திரன்" என்று தொடங்கி யுகாந்தரத்தில் பிள்ளைகளாகச் சொல்லக்கூடிய க்ஷேத்திரஜன் என்பவனாகிய அனுமனுடைய விவகாரமிருத்தலாலும், "தத்தன், ஔரஸன் இவர்களைத் தவிர மற்றவர்கள் கலியில் புத்திரராகமாட்டார்கள்" என்று பராசர்முதலிய மகாரிஷிகளால் கலிகாலத்தில் மறுக்கப்பட்ட இந்த க்ஷேத்திரஜபுத்திரனும், நியோகத்தாற்பிறந்த பிள்ளையும் ஓரே மாதிரியேயன்றி அதில் வேற்றுமையைக் காணோம். மூன்றாவது காரணமும் அவ்வளவு நிலைபெறத்தக்கதன்றாம். ஐவருக்கு ஓர் மனைவியிருந்ததக்காலத்திலுளதென்பது அவ்வித ஆசாரம் ஓரிடத்தி லிருந்தபோதிலும் மற்ற எந்த ஸ்திரீகளிலும் அது குற்றமென்றும், பதிவிரதைகளின் மகாத்மியமளவற்றதென்றும், வியபிசாரம் மிகக்கொடியதென்றும், திரௌபதி விவாககாலத்தில் அவ்விதஞ்செய்வது நியாயமாவென மற்றவிடத்திற் குற்றமேனும் அவ்விடத்திற் சிறப்பாய்ச் சில காரணங்களிருப்பதாய் வேதவியாசரருளிச்செய்த பாரதத்தில் எழுதியிருப்பதால், அது அக்காலத்திலுள்ள ஆசாரமாக முடியாது. அதைக்கொண்டும் இது முன் இது பின்னெனத்துணிதலெங்ஙனமமையும்? அன்றியும், இராமாயணத்தின் நடை வெகு சிலாக்கியமும், அநேக அலங்காரங்களும் பொருந்தியதாயிருக்கின்றதென்றும், பாரதம் அங்ஙனமில்லையென்றும் சொல்வது உண்மையேயாயினும், அஃதொன்றே இராமாயணம் பிந்தியதெனச்சொல்லக் காரணமாகாது. ஏனெனில், அதிற் கிரந்தங் குறைவாதலின் அடிக்கடி நல்ல சுலோகங்கள் கிடைக்கும். பாரதம் மிக விரிவாதலால் ஒவ்வோரிடங்களின்மாத்திரம் இனிய நடையாயிருக்கும். அன்றியும், பலசாஸ்திரங்களினுண்மை இராமாயணத்தி லுளதென்பதும் பாரதத்தை முற்றிலும் ஆராயாமையானெழுந்த மொழியேயாம். பின்னும், ஸ்ரீராமனுடைய பட்டாபிஷேகத்திற்காகக் கூடிய மகாநாட்டில் பிராமணர்கள், மிலேச்சர்கள் முதலாகிய அனைவரும் சேர்ந்திருந்ததாகச் சொல்வதால், ஒற்றுமை நிறைந்திருந்தகாலத்தில் இராமாயணமென்றெண்ணுவதும், யாம் முற்கூறிய விதுரர், பகதத்தர் முதலாயினோர் சரித்திரங்களால் விடையளிக்கப்பட்டதென்றறிக. இராமாயணத்திலே மலையாளநாட்டின் பெயரிருப்பதும் அது பிந்தியதென்பதற்குக் காரணமாமெனச் சிலர் கூறுவர். அஃதெ

[illegible]

வ்விதம் இராமாயணத்தைப் பிந்தியதாக்கும்? வெகுகாலத்திற்குப்பின் ஜனங்கள் குடியேறிய தெலுங்கநாட்டின் பெயர் பாரதத்திலேயிருத்தலின் அதுவே பிந்தியதாம். இராமாயணகாலத்திற் பல பாஷைகளிருந்ததாகப்புலப்படவில்லை. பாரதகாலத்தோ பார்சீயென்றாகிசுத்தக்க ஓர் மிலேச்சபாஷையிருந்ததாகவும், தமிழிருந்ததாகவும்வெளியாகின்றது. ஆதிபருவத்திலே அரக்குமாளிகைப்படலத்தில் வாரணவதமென்னும் பட்டணத்திற்குச் செல்லும் தருமபுத்திரரைக் கண்ட விதுரர் 'அலோகம்' என்று தொடங்குமோர்வித மிலேச்சபாஷையாற் பேசினரென்றும், சபாபர்வத்தில் அருச்சுனன் தீர்த்தயாத்திரைக்கேகும்பொழுது மணலூரென்னுமோ ரூரை யடைந்ததாகத் தமிழ்ப்பெயரு மதிற் காணப்படுவதாலும் பாரதம் பிந்தியதென்பது பசுமரத்தாணிபோல் நாட்டப்பட்டது. இனி, இவ்விரு கதைகளையும் சத்தியமாய்நோக்கினோரைக் கண்டு சொல்வதியாதெனில், ஸ்ரீராமன் இராச்சியபரிபாலனஞ்செய்யுங்கால் இராமாயணமும், ஸ்ரீ தருமபுத்திரர் உயிரோடிருக்கும்பொழுது பாரதமும் எழுதப்பட்டதென்பது அந்தந்தப் புஸ்தகங்களிலேயே வெளியாகும். இவ்விடம் நாம் எழுதிய பல காரணங்களால் பாரதம் பிந்தியதென்றும், இராமாயணம் முந்தியதென்றும் வெளிப்பட்டது. இவ்விடத்தில் பூர்வபக்ஷமாக வெடுத்துக்காட்டிய காரணங்களெல்லாம் மேற்றிசையாரே யெழுதியதன்று. சில மேற்றிசையார் கூறியதும், சில அவர் தாற்பரியத்தை யனுசரித்து நம்மவர் கூறியதுமாயுள்ளன. அதுகொண்டே யாம் எல்லாவற்றிற்குஞ் சமாதானங்கூறியது காண்க. இவ்விடத்திலே இரண்டு ஆசங்கைகளுண்டாகின்றன. அவற்றில் முதலிலே இரண்டு கிரந்தங்களுடைய காலமும் இன்னதென்றறியப்படவில்லை. இராமாயணத்திற்கும் பாரதத்திற்கும் இராமாயணம் முந்தியதாகவிருந்தபோதிலும் இடையே சொற்பகாலமே யிருக்கவேண்டும். என்னை? இராமாயணகாலத்திலே பிதாவாகிய நரகாசுரனும் பாரதகாலத்தில் நரகாசுரன் குமாரனான பகதத்தனும், இராமாயணகாலத்தில் இலங்கைக்கு அரசன் இராவணனும் பாரதகாலத்தில் விபீஷணனும், இராமாயணகாலத்தில் பராசமகாரிஷியும் பாரதகாலத்தில் அவர் குமாரனான வாதராயணமுனிவரும் எடுத்துப் பிரஸ்தாபிக்கப்பட்டிருத்தலானென்க. இதுகொண்டு நாம் அறிவது இராமாயணத்திற்கும் பாரதத்திற்கும் மத்தியகாலஞ் சொற்பமேயன்றி இந்துக்கள் கூறும்வண்ணம் அநேகவருடங்களெனத் தோன்றவில்லை. இவ்விடத்திற் பூர்வபக்ஷஞ்செய்பவர் கிறிஸ்தவராயின் அவர்க்கு நாம் சொல்லும் சமாதான மென்னையெனில், தம் மதநூலாகிய விவிலியத்திலே யெடுத்துக்கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசிகள் நெடுங்காலஞ் சீவித்ததாக நீவிர் நம்புவதுபோல், நாமும் எமது மூலாசிரியர்கள் நெடுங்கால முயிர்த்திருந்ததாக நம்புவோமென்பதே. அங்ஙனமின்றி "தான் கெட்ட தமன்றிச் சந்திரபுஷ்கரணியையுங் கூடக்கெடுத்தா" னென்றபடி சிலர் தம்மதங்கெடினும் பிறர்மதங் கெடுவதே தமக்குப் புருஷார்த்தமென்றுகொண்டு எம்மை ஆக்ஷேபிக்கவருவராயின், அவர்க்கு நாம் சொல்வதொன்றுண்டு. அஃதென்னையெனில், பல காரணங்களால் இராமாயண பாரதங்கள் சுமார் ௪000. வருடங்களுக்கு முன்னுள்ளதாகத் தெரியவருகிறன. அதற்கு முந்திய காலத்தின் அளவு இவ்வளவெனக்குறிக்க எமது புத்தி போதியதன்றென் றவ்விஷயத்தை விட்டொழிவதே நலம். இப்பொழுது எடுத்துரைத்த நாலாயிரம்வருடங்களுக்குமுன்னரே இரா

[illegible]

(ஸம்வாதம்?)

𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑌪𑍍𑌪𑌯𑍍𑌯𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌚𑌰𑌿𑌤𑍍𑌰𑌮𑍍.

———:O:———

𑌆𑌰𑍍𑌯𑌾𑌃!!

[illegible]

[illegible]

———):O: ::O:(———

𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌪𑌨𑌮𑍍

𑌭𑍋 𑌸𑌹𑍃𑌦𑌯𑌾𑌃!

[illegible]

மாயண மிருத்ததற்குக் காரணம் யாதெனில், இராமாயணத்திலே கிஷ்கிந்தாகாண்டத்தில் காம்போஜர்கள், குருக்கள் இவர்களை வடதிசையிற் குறித்து, அவர்களுக்கடுத்தவர்களாக யவனர்களையும் எடுத்தெழுதியிருக்கின்றது. அவ்விதமே பாரதத்திற் சபாபர்வத்திலே நகுலன் திக்குவிஜயஞ்செய்யச் சென்ற விஷயத்தை பெழுதுவதோடு இவ்விந்துதேசத்தின் சமீபத்தில் யவனர்க ளிருந்ததாகத் தெரியவருகின்றது. மேற்றிசையாரிற் சிலரோ, இந்துதேசத்தவர்களான ஆரியர்களுக்கும், முற்காலத்தில் யவனரென்றும் இக்காலத்தில் கிரேக்கரென்றும் வழங்கப்பட்ட ஓர் வகுப்பினர்க்கும் பிரிவுண்டாகியது சுமார் மூவாயிரம் வருடங்களுக்கு முந்தியெனக் கூறுகின்றனர். மற்றும் சில ரபிப்பிராயத்தை நோக்குங்கால், நாலாயிரம் வருடங்களுக்குமுன் அவ்வேற்றுமை ஏற்பட்டதாகத் தெரியவருகின்றது. இவ்விதம் ஒருவர் மூவாயிரம் வருடங்களுக்கு முன்னென்றெப்பியதுடன் இன்னும்ஓர் ஆயிரத்தைச்சேர்த்தால் யாது குறை வந்தது? நமது தேச வழக்கத்தின்படி சுமார் ஐயாயிரம்வருடங்களுக்குமுன் பாரதம் எழுதப்பட்டதாக நம்புகிறோம். கிரீக்தேசத்திற்குச் சரித்திரமெழுதிய ஒருவர் யவனர்களுக்கும் இந்துக்களுக்கும் உண்டாகிய வேற்றுமை சுமார் நாலாயிரவருடகாலத்திற்கு முன்னிருக்கவேண்டுமென்று குறிப்பிடுகிறார். எங்ஙனமெனில், அவர் கிரீக்தேசத்தில் நடந்த ஓர் சரித்திரத்தின் காலம் கிறிஸ்துபிறத்தற்கு முன் சுமார் இரண்டாயிரவருடகாலமென்றெழுதியிருக்கிறார். அதற்கு முன்னரே இவ்வேற்றுமையேற்பட்டிருக்கவேண்டுமாதலின், இதை ஒருவாறு நிச்சயிக்கலாம். வேறு சிலர் கி. மு. ஆயிரம்வருடத்திற்கு முன்னரே இப்பிரிவு ஏற்பட்டிருக்கலாமென்று ஊகிக்கின்றார்கள். அதுகொண்டே கதாசரித்ஸாகரமென்னுங் கிரந்தத்தில் சுமார் மூவாயிரவருடங்களுக்குமுன் பிறந்த பாணினிமகாரிஷி தாம் எழுதிய வியாகரணத்தில் வாசுதேவனென்னும் பதத்திற்கும், அருச்சுனனென்னும் பதத்திற்கும் விருஷ்ணிகள், அந்தகர்கள், குருக்களென்கிற சில ஜாதிப்பெயர்களுக்கும் இலக்கணங் கூறியிருக்கின்றார். அதுகொண்டு பாரதம அதற்கு முந்தியதென் றேற்படும்.

இன்னும் வரும்.

மதமும், அதன் பிரயோசனமும், அதன் ஆசிரியரும்.

ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதர் சரித்திரம்.

[முன் தொடர்பு]

நாம் ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதர் எழுதிய பல கிரந்தங்களைக் கொண்டும், இன்னும் பல காரணங்களாலும் அவருடைய திருவவதாரம் கலியுகாதி (சகூசஎ) என்றும், இங்கிலீஷுக் கணக்கின்படி (கடுசரு) என்றும் நிச்சயித்தாமன்றோ? இதுவிஷயத்திற் சற்றேறக்குறையவே அத்தீக்ஷிதரவர்களுடைய சரித்திரத்தை யெழுதிய பரமஹம்சேத்தியாதி ஸ்ரீ சிவானந்தசுவாமிகள் தாம் எழுதிய ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதரவர்கள் சரித்திரத்தில் கலியுகாதி சகூருச-ம் வருடம் அதாவது இங்கிலீஷ் கடுருஉ-ல் அவர்கள் பிறந்ததாக எழுதியிருக்கின்றார். உற்றுநோக்கி விரண்டிற்கும் அதிக வித்தியாசமில்லை. உள்ள வித்தியாசம் ஏழு வருடமே. நாமுரைத்ததற்கும் அவரெழுதியதற்கும்

[illegible]

நவ்யங்காவ்யங்கவித்ரயஞ்ச

——):C:O:⁐:O:C:(——

[illegible]

சற்றேறக்குறைய ஒற்றுமையிருத்தலால், அஃதுண்மையென்றே நம்புகின்றோம். ஏனெனில், அவரெழுதிய ஸ்ரீமத் அப்பய தீக்ஷிதர்சரித்திரத்தில் ஸ்பஷ்டமாய் அவருடைய ஜாதகத்தையும் எழுதியிருக்கிறார். அவரெழுதிய சரித்திரத்தில் அகப்படாத பலவிசேடங்கள் அதாவது சார்வபௌமகவியவர்களுடன் தீக்ஷிதசுவாமிகள் கலந்ததுமுதலிய பல சரித்திரங்கள், அத்தீக்ஷிதரவர்கள் திருமரபிலவதரித்து மன்னார்குடியில் வசிக்கும் ஸ்ரீ மகாமகோபாத்தியாயர் ஸ்ரீராஜுசாஸ்திரிகளவர்கள் தாம் இயற்றிய நவரத்தினமாலிகாஸ்தோத்திரத்தில் வெளியிட்டிருக்கின்றார்கள். அன்றியும், இன்னும் பலவிஷயங்கள் ஒருவர் சொல்லியபடி மற்றவர் சொல்லாமலும், ஒன்றுக்கொன்று மாறாகவும் ஜனங்கள் சொல்லிவரும் சில சரித்திரங்களை நாம் நம்பாது விடுத்தோம். அவரியற்றிய கிரந்தங்களின் விஷயங்கள் சங்கிரகமாக எம்மாலெடுத்துக் காட்டப்பட்டன வன்றோ? இப்பொழுது நாம் கண்டமட்டில் அவர் எழுதிய புஸ்தகங்களின் கிரந்தசங்கியை சுமார் ௭0,000. ஆகின்றது.

வரும்.

அறிக்கை.

நண்பர்களே!

நமது ப்ரம்மவித்தையென்னும் இப்பத்திரிகை ஒருவருடகாலமாய் நடைபெற்றுவருகின்றதென்பது நங்கையொப்ப நண்பர்களுக்கும் ஏனையோர்க்கும் தெரிந்த விஷயமேயாம். இப்பத்திரிகை சுமார் ஐந்துமாசகாலமாய் விஷயங்கள் அதிகப்படுவதால், காலத்திற்கேற்றபடி அரை, ஒன்று, ஒன்றரைப் பாரங்களுள்ள அநுபந்தங்களுடன் வெளிப்பட்டுவருகின்றது. ஒவ்வொரு சமயத்திலும் விஷயங்களுக்கேற்றபடி ஓர் வரைப்பின்றி அநுபந்தங்களைச் சேர்ப்பது மிகக் கடினமன்றோ? ஆதலின், நங்கையொப்பநண்பர்களிற் சிலர் இப்பொழுது நடைபெற்றுவரும் [௧௬] பக்கங்களுடன் இன்னும் [௮] பக்கங்களைச் சேர்த்து [௨௪] பக்கங்களாக்கி மாதம் ஒருமுறையாவது, அல்லது பிரித்து [௧௨] பக்கங்களாக்கி மாதம் இருமுறை இரண்டு சஞ்சிகைகளாயாவது வெளிப்படுத்தினால், இன்னும் அநேக விஷயங்களையெழுதிவெளிப்படுத்தத் தக்கதாயிருக்குமென்று சொல்லுகின்றனர். அப்படிச் செய்யின், இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கும் கிரயத்திற்குமேல் வருடம் ஒன்றுக்கு ரூபா [௧] அதிகமாகும். இதுவிஷயத்தில் நங்கையொப்பநண்பர்கள் தத்தமபிப்பிராயங்களைக் கடிதமூலமாய் எமக்குத் தெரிவிப்பாராயின் நாம் அதுவிஷயத்திற் புகுவோம். பத்திரிகைகளை ஆதரித்து விருத்திசெய்வது பத்திரிகாபிமானிகளான கனவான்களின் கடமையன்றோ.

புதிய காவியமும், மூன்று கவிகளும்.

ரசிகசிகாமணிகாள்! சற்றுச் செவிசாய்த்திடுமின்! மூக்கவிகளென்னும் மும்மணிகளின் திருவாக்கைத் திருவாபரணமாய்க் கொண்டதும், சொல்லலங்காரங்களுக்கு காமதேனு போன்றதும், இக்காலத்துக் குசிதமாகிய பல கவிகற்பனைகளுக்குக் கற்பகவிருக்ஷம்போன்றதுமான ஓர் வஸ்து எமக்குக் கிடைத்தது. அது விக்டோரியாசரித்திர சங்கிரகம் என்று

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ம், விக்டோரியாசக்கரவர்த்தினி குணமணிமாலை என்றும், பஞ்சாசத்பூர்த்திப்பஞ்சாசிகை என்றும் பெயர்வாய்ந்த மூன்று பிரிவுகளிருந்தன. இம்மூன்றனுள் மூன்றாவதையியற்றினார் மகிமைபொருந்திய வஞ்சிநாட்டின் மேல் மகாராணியின் மணவாளனும், துலாபாரசதகம், கம்ஸவதசம்பு முதலிய பல புஸ்தகங்களையெழுதி அநேககவிகள் ஆனந்தமுறச்செய்தவரும், தமது புகழால் வஞ்சிநாட்டைச் செழிப்பித்தவரும், ஸ்ரீபத்மநாபன் மூன்று பிராட்டிகளுடனே யெழுந்தருளியிருப்பது போல் அமரவாணி, ஊணர்பாஷை, வஞ்சிமகாராணியென்னு முப்பிராட்டிகளுங் காதலுறத்தக்கவருமான கேரளவர்மா வென்போர். நாம் அக்காவியத்தினினிமையையும், நம்தேசத்தார், மேற்றிசையாரென்னு மிருவகைக்கவிகளின் சம்பிரதாயவமைப்பையும், பற்பல ரசங்களின் மேன்மையையும் யாதென்று சொல்வேம்! ஸ்ரீ பரமேசுவரனுக்கு அமைந்த தோழன் குபேரனைப்போல இவரது மருமகனாகிய ஸ்ரீமான் ராஜராஜவர்மா வென்பவரும் எல்லாவிஷயங்களிலும இவருக்குப் பிரதிபிம்பம்போன்றவரே. கணபதியென்னுங் கவியும் கவிகளின் மண்டனியே. இலக்கணவிலக்கியங்களும், நற்குணமணிகளும் அவரிடத்து நிலைபெற்றிருக்கின்றன. இக்கவியொருவரே அவ்விருகவிகளின் நடு வீற்றிருக்கத் தக்கவர். அவ்விருகவிகளே இவரை யிருமருங்கு மாதரிக்கத்தக்கவர்கள். இம்முக்கவிகளின் மொழிமணி நிறைந்த இப்புத்தகத்தை யெமக்கனுப்பியவர்க்கு மிகுந்த நன்றிகூறி, அவர்கள் காவியங்கள் ஓர் புஸ்தகத்திலொற்றுமைபெற்றதுபோல் அவர்களும் நீடூழி அந்நேசம் பெறுவாராக; அம்மூன்று மொன்றுபட்டு எம்மிடம் வந்ததுபோல், அம்மூவரின் நேசமும் எம்மிடமிருப்பதாகவென் றீசனைவேண்டி உள்ளங்களித்து உண்மைநிலைபொழியு மிம்மொழிகளை அவர்களுக்குக காணிக்கையாக்கினோம்.

கடிதங்கள்.

கடிதர்கள் அபிப்பிராயத்திற்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

குதர்க்காசலகுலிசத்திற்கு விடை.

ஐயா,—ஸ்ரீநிவாசசாஸ்திரிகளாகிய எமது நண்பரே! தாம் சிறிதிங்கு கவனிக்குமாறு வேண்டுகின்றேம். நாம் வேறு சில காரியங்களிற் கவனஞ்செலுத்தியதால், எழுதவேண்டிய விஷயங்களை யெழுதாதொழிந்தோம். அப்பிழையைப் பொறுத்தருள்வீராக.

சென்ற சஞ்சிகையில் எமதுநண்பர் "வேதமூர்த்திகாள்" என்று தொடங்கி "சிறிதுகாலம் எமதுகுலிசமோய்ந்திருக்கட்டும்" என்று முடித்ததும், நடுவில் ஏதோ "ஒரு வைகாஸர்" என்று பரிகாசமொழிசமமைந்ததுமான ஒருபந்நியாசமெழுதியிருக்கக் கண்டுகளித்தோம். அந்தோ! ஒடிந்தகுலிசமோய்வடைவதென்னம்? விதண்டாவாதிகளெவரோ? அதைவித்துவான்களே யறிவர். சில பாஞ்சராத்திரிகள் தம்மை நிந்தித்தாரென எழுதினர். கலிகாலமகிமையா லங்ஙனஞ்செய்யின் இவர்க்குக்

[illegible]

கெடுதியென்னே? இம்முறை நாம் அனுப்பும் உபந்யாசத்தைத் தங்கள் பத்திரிகையிற் பிரசுரித்துத் தடையின்றி எமது பெயரையும் வெளியிடுமாறு வேண்டுகின்றனம். இதுவிஷயத்தில் நாம தீக்ஷைகொண்டோம். தாங்களோ பக்ஷபாதமின்றி நடுவுநிலைமையனுள்ளார். முதலில் "சில வேதவாக்கியங்களை யெடுத்துக்காட்டுவோம்" என்று தொடங்கிப் பஸ்மஜாபாலோபநிடதத்தில் ஸ்ரீநாராயணன் திருநீறுதரித்ததாய் ஓர் வாக்கியமெடுத்தெழுதினர். நாம் பின்பு "நீரெழுதிய வாக்கியங்களால் உருத்திரகணங்கள் திருநீறு தரித்தனவென்றன்றி ஸ்ரீமந்நாராயணன் திருநீறுதரித்ததாகப் புலப்படவில்லை" என்று சமாதானமுரைத்தோம். அதற்குச் சுவர்ணவழிபங்கு ஹரி திருநீறுதரித்தலின்றியமையாதென விடையளிக்கப்பட்டது. சிவவழிபாடே அர்த்தவாதமாகலின், அஃதெங்ஙனமமையும்? அது அர்த்தவாதமாதல் யாங்ஙனமெனின், "அக்கினி தேவர்களுக்குள் கீழானவன்; விஷ்ணுவே பரமன்; நாராயணன் பரப்பிரமம்; நாராயணனே பரதத்துவம்; நாராயணனொருவனேன்றே விருந்தனன்; பிரமனிருந்திலன்; ஈசானனிருந்திலன்; நாராயணனினின்று முருத்திரன் பிறந்தனன்; உள்ளும் புறமும் வியாபகன் நாராயணன்" என்றெழுந்த பல வேதவசனங்களால் நாராயணனே பரம்பொருளெனப் புலப்படுதலாமென்க. 'நாராயணனொருவனே யிருந்தனன்' என்னும் வாக்கியத்தால் இரண்டாம்பொருளக்காலத்திலிருந்ததெனச்சொல்வதனையாவாம். 'பிரமனிருந்திலன்; ஈசானனிருந்திலன்' என்று ஏனையோர் நிலைமையை மறுத்து இன்னோர் பெருமையை விளக்கியிருத்தலால், வாசுதேவன் பெருமையை யாம் சொல்லவும் வேண்டுமோ. சுருதி ஸ்மிருதிகளின் உண்மையைக் கண்டறிந்த முற்காலத்துப் பிராமணர்கள் விஷ்ணுவே பரமசத்தியமென நினைந்து அநேக கர்மங்களை நடத்திவந்தார்கள். இப்பொழுதும் சிறுவர்க்குவித்தியாரம்பஞ்செய்யும்பொழுது ஹரியென்று சொல்லிவைப்பதும், அச்சுதனென்றே ஆசமனீயஞ் செய்வதும், கோவிந்தவென்றே சங்கற்பஞ்செய்வதும், ஹரிஓம் என வேதமோதுவதும், கர்மங்களின்பிராயச்சித்தமாக கிருஷ்ணவென்பதும், ஒருவனேவிஷ்ணு என்று தொடங்கும் மந்திரத்தால் பிதிர்தேவதைகளுக்குத் தத்தஞ்செய்வதும், அந்தசம்ஸ்காரத்தில் பல மந்திரங்களுக்குப் பதிலாகக் கோவிந்தாவென் றுச்சரிப்பதும் கர்மவழியிற் காண்கின்றோம். சந்நியாசிகளும் நாராயணவென்றே சொல்கின்றார்கள். அவர்களுக்குப் பின்பு நாராயணபலியே செய்யப்படுகின்றது. ஆராயுங்கால், வைதிகப்பிராமணர்கள் உபாசித்தற்குரிய தெய்வம் பிறிதுமுளதோ? இவ்விஷயத்தில் பக்ஷபாதமற்ற வித்துவான்களே பிரமாணம். அன்றியும், "இச்சகத்திற்கு ஈஸ்வரிவிஷ்ணுவின் தேவி; சர்வபூதங்களுக்கும் ஈஸ்வரி ஸ்ரீதேவி" எனத்தொடங்கி வேதம் இலக்ஷுமியே ஜகதீஸ்வரியென்று கூறவில்லையா? "எனை பிரமனைச் சிருஷ்டித்து வேதங்களை அவனுக்குபதேசித்தருளினன்" என்னு மந்திரமும் நாராயணனையே கூறுகின்றது. உருத்திரன் மந்திரப்பொருளாகான். அவன் பிரமனுடைய புத்திரனென்றும், பிரமன் நாரணனுடைய புத்திரனென்றும் பலவிடங்களிற்சொல்லப்பட்டிருக்கின்றது. மகாபாரதசாரமாகிய கீதையிலே "வேதங்களா லறியப்பட்டவனும், வேதாந்தத்தையருளிச்செய்தவனும், வேதங்களையறிந்தவனும் யாமே" என்று கண்ணபிரான் திருவாய்மலர்ந்தருளியதுங் காண்க. பாரதத்

[illegible]

[illegible]

[illegible]

தினும், ஏனைச் சாத்திரங்களினும் ஈதை உயர்வுடைத்தெனக் கருதியன்றோ ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகள் அதற்கும் விஷ்ணு சகஸ்திரநாமத்திற்கும் பாஷியம் செய்தருளினர். பாரதத்திலே சிற்சிலவிடங்களில் கண்ணன் சிவனை வழிபட்டதாகச் சொல்வதும் மானுடாவதாரத்திற் கேற்றதாமென்க. அங்ஙனமே பலதேவதைகளை அவர் பூசித்ததுமாமென்பது துணியாகும். "வேதத்திலே விஷ்ணுவுக்கு எப்புண்டரங் கூறியிருக்கிறது" என்று வினவினர். இது வினவத்தக்கதே. வேதத்தில் "ஊர்த்துவபுண்டரந் தரித்து" என்று தொடங்கிய மகோபநிடதத்தை அவர் நோக்குமாறு வேண்டுகிறோம். அந்த வேதத்தின் விஷ்ணுவை வழிபடுவோர் திருமண் தரித்தல்வேண்டுமென ஏற்பட்டது. நாராயணன் திருநீறு தரித்திருப்பாராயின் அவனைவழிபடுவோர் திருமண் தரித்த லொவ்வாதாகலானும், தொண்டர்களுக்கு அவ்வத்தேவதைகளின் அடையாளங்களைத் தரித்தலே யின்றியமையாமையென்பதானும் திருமாலுக்குத் திருமண்ணுரிமையே திண்ணமாம். திருநீற்றுளூர்த்துவபுண்டரமிடின் ஸ்மிருதிக்கு மாறுபடுமாதலின், அஃதையாவாமென்க. இங்ஙனம் வேதத்தால் திருமாலுக்குத் திருமண்ணே சித்தித்தலால், அது தந்திரமுதலியவற்றால் சந்தனம், வெண்ணிறமிர்த்திகையாதிய பல திரவியங்களாமென்று வெளியாகின்றது. அதற்கு ஸ்ரீவைகாநசதந்திரத்தில் மரீசிமகாரிஷியாற் சொல்லப்பட்ட விமானபூஜாவிதியில் சுகம் படலத்திலுள்ள வசனங்களை வடமொழியிற் காண்க. வைகாநசம் தந்திரமென்று தள்ளத்தக்கதன்று. அது வேதத்தையே யனுசரித்ததென்று வெளியிடுவோம். இன்னும் வரும்.

[மொழிபெயர்ப்பு] இங்ஙனம்,

எலத்தூர்ச் சுந்தரராஜசாஸ்திரிகளென வழங்கும்

செல்லமய்யங்கார்.

அமிர்தபெஜார் பத்திரிகை.

"சென்னைச் சட்டநிரூபண சபையில் தேவாலய வருமானத்தைப்பற்றிய மந்திரணபத்திரம் அச்சபையாரால் பேசப்படுந்தறுவாயில் இருக்கின்ற தென்பதே தென் ராஜதானியில் அநேகருள் நடக்கும் சம்பாஷணைகளி லடங்கிய முக்கியமான விஷயம். அநேகர் அவ்வகையான மந்திரணபத்திரம் அவசியமென்றும், இன்னும் அநேகர் அவசியமற்றதென்றும் கூறுகின்றனர். முந்தினவரிலும் பிந்தினவரே பெரும்பான்மையோர். இவர்கள் தேவாலய வருமானத்தின் மேல் விசாரணை விஷயமாகத் துரைத்தனத்தாரால் சட்டம் ஏர்படுத்தப்படுவது அனுவசியமென்றும், தீமைக்குக் காரணமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். சென்னையில் இங்கிலீஷ் கல்லாதவர்களின் அபிப்பிராயமே இவ்விஷயத்தில் கேட்கப்படவில்லை. மந்திரணபத்திரத்தால் விளையக்கூடிய நன்மை அவ்விராஜதானியில் உயர்ந்த சமுதாயத்தில் அநேக பெரிய வேலைகள் உண்டாகுமென்பதொன்றுமாத்திரமே என்று அநேகருக்கு அச்சத்துக்கிடமாகவிருக்கிறது."

ஆரியமதவேதமானி.

Printed and published for the Proprietor at the "Brahmavidya Press" Chidambaram.

ப்ரம்மவித்தியா

அநுபந்தம்-

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

புதிய புத்தகம்.

வைராக்கியம்—இந்த புஸ்தகத்திலிருக்கும் தாதலின் இதனை அப்புஸ்தகங்களிலெல்லாம் சண்டறிய ... அப்பிராயப்பட்டதையால் திருத்தப்பட்டது.

துர்க்காகலசதீசம்—ஒருமுறை வரும்.

விதவாவிவாகக்கண்டனபீடிகை, தற்காலநாகரீகப்ரபங்கம்—இவை காலதாமதமானதையால் இப்பொழுது நிறுத்தப்பட்டது.

வைதிகசித்தாந்தரத்தினாவளி—பத்திரிகைக்கு உரிய சொற்கள் இருந்தமையால் பதிப்பிக்கப்பட்டது.

ஆத்மப்ரபோதம் சத்தியமா?—அப்பயதீக்ஷிதர் நிர்ப்பந்தியாகம்.—இவை வரும் முறை வரும்.

பத்திராதிபர் உத்தரயாத்திரை.

பின் பல்லாரியை விட்டுநீங்கிச் சென்னையையடைந்து அங்கு ஓர்வாரம் வசித்தனர். அவ்விடத்தில் கிறிஸ்தவர்களுக்கும் இந்துக்களுக்கும் "பைபிலிற்சொல்லியபடி கிறிஸ்து கடவுளா" என்பதைப்பற்றி நடந்த விவாதத்தில் அவ்விருதிறத்தாரின் கோரிக்கைப்படி இரண்டுதினம் மத்தியஸ்தஞ்செய்து ஈற்றில் கிறிஸ்து கடவுளல்லவென்று அவ்விருபாலார் மனமுவப்பத் தீர்மானஞ்செய்து, அச்சபையார் வேண்டுகோளுக்கிசைந்து ஓர்தினம் தற்கால நாஸ்திகத்தின் குற்றங்களைகுறித்தும், மற்றோர்தினம் கிறிஸ்துமத ஆபாசங்களைக் குறித்தும், மற்றோர்தினத்தில் இந்துமதமேன்மையைக் குறித்தும் உபந்யசித்தது, பின் அவ்விடத்தைவிட்டகன்று திருப்பதிமுதலிய க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு மீண்டு காஞ்சீபுரநகரை யடைந்து அவ்விடத்திலே பச்சையப்பஹைஸ்கூலில் சென்னையில் நடைபெற்றுவரும் இந்துட்ராக்ட் சொஸைட்டியைக் குறித்தும், நமது மதமேன்மையைக் குறித்தும் ஓர் உபந்யாசஞ்செய்து அவ்விடம்விட்டு ஜூலை மீ 10-உ யாத்திரை முடித்தனர்.

"The Religious Endowment Bill which is about to be taken up for discussion in the Madras Legislative council is the principal subject of discussion with a large class of people in the Southern Presidency. There is a strong party in favour of the Bill and is a stonger one which is opposed to it. The latter party hold that a legislation for the supervision of Religious Endowment is unnecessary and very injurious. The opinion of the Non-English Educated community in madras has not been taken on the subject; and it is apprehended that the only good which the Bill will probably do, is to create at the expense of the Endowments a number of high-salaried and well-paid appointments in the Presidency"

Amrita Bazzar Patrika
7. July. 87.

விளம்பரம்.

இந்து மதங்களுக்குரிய புஸ்தகங்களின் மிகத் தாழ்வான விற்பனை.

புஸ்தகங்களின் பெயர்.	குறைந்த விலை.			முன்விலை.		
	ரூ	அ	ப	ரூ	அ	ப
சாந்தோக்கியோபநிஷத்துகள் அத்வைத விசிஷ்டாத்வைத பாஷ்ய ஸகிதம். (தெலுங்கு)	2	6	,,	3	8	,,
வேதாந்த தீபம். ௸	1	6	,,	2	,,	,,
யதிந்திரமத தீபிகை ௸	,,	5	,,	,,	8	,,
பகவத்விஷயங்கள் 2-9 பத்துகள் பிரதி (தெலுங்கு) ...	4	12	,,	7	,,	,,
,, 3-5-7-10 ,, ,, ௸ ...	5	6	,,	8	,,	,,
,, 4-6 ,, ,, ௸ ...	6	4	,,	9	,,	,,
,, 8 ,, ,, ௸ ...	4	,,	,,	6	,,	,,
கிரந்த ஏழு உபநிஷத்துகள் அத்வைத விசிஷ்டாத்வைத பாஷ்ய ஸஹிதம்.	6	12	,,	10	,,	,,
திருவாய்மொழி பிரதிபதம்.	2	11	,,	4	,,	,,
திருச்சந்த விருத்தம்	,,	2	,,	,,	4	,,

பச்சையப்ப டிரஸ்டீஸ் ஆபீஸ்
பட்டணம் 1887-௵ ஜனவரிமீ 28-உ

இ. பாலசுந்தரமுதலியார்
காரியதரிசி.